[2013 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறைமூலமாக மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து, கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அங்கு ஒரு கால்நடை கிளை நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 303, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

303—

பேருந்து பணிமனை

***18355—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கயத்தாறு அல்லது கடம்பூர் பேரூராட்சி பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மண்டல தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையின் கிளை ஒன்று கோவில்பட்டியில் செயல்பட்டு வருகிறது. இப்பணிமனையானது, கயத்தாறு மற்றும் கடம்பூர் ஆகிய இரண்டு இடங்களிலிருந்தும் சுமார் 31 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளது. நடைமுறையிலுள்ள விதிகளின்படி இரண்டு பணிமனைகளுக்கு இடையேயான தூரம் 40 கி.மீ.-க்குமேல் இருக்க வேண்டும். எனவே, கயத்தாறு அல்லது கடம்பூரில் பணிமனை தற்போது அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாள் ஒரு இனிய நாள், பொன்னாள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகெங்கும் வாழ்கின்ற ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் காவலராக இருக்கின்ற கழகத்தின் காவல் தெய்வம், இன்றைக்கு காவல் துறை மானியக் கோரிக்கையினை வழங்கவிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேராது இயல்வது நாடு."

என்ற வள்ளுவர் வாக்கினை மெய்ப்பித்து, மக்கள் பசியாற்றும்வண்ணம் 20 கிலோ விலையில்லா அரிசி மற்றும் ரூ.20/-க்கு தரமான அரிசி, ஏழை மக்களின் பசி தீர்க்க அம்மா உணவகம் தந்திட்ட அன்னமிட்ட தாய், எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஓவாப் பிணியை ஒழித்திடும்வண்ணம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்தவர் டாக்டர் புரட்சித் தலைவி எங்கள் அம்மா. செறுபகை முடித்து, தீய சக்திகளை அடியோடும், வேரடி மண்ணோடும் சாய்த்து வீட்டிற்கு அனுப்பி, சிறந்ததோர் அரசமைத்து, அனுதினமும் அயராமல், தினம் ஒரு திட்டம் தந்து, நல்லாட்சி செய்யும் அருந்தவமான எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான் போக்குவரத்துத் துறைக்கு பொற்காலம் என்பதை நிரூபிக்கும்வண்ணமாக, போதுமான இட வசதியின்றி தனியார் இடத்தில் காலம் காலமாக இயங்கிவந்த கோவில்பட்டி பணிமனைக்கு, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நூறாவது நாளிலேயே ரூ.70 இலட்சத்தை வழங்கியுள்ளார், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.40 இலட்சத்தை வழங்கிட வழிவகை செய்து, 6.1 ஏக்கரில் புதுப் பொலிவுடன் புதிய பணிமனை அமைத்துத் தந்திட்ட அம்மா

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அவர்களின் பொற்பாதங்களில், கோவில்பட்டி தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.

கோவில்பட்டி தொகுதி, 36 வார்டுகளைக் கொண்ட பெரிய நகராட்சியையும், 64 ஊராட்சிகளையும், 3 பேரூராட்சிகளையும் உள்ளடக்கிய பெரிய தொகுதியாகும். எனவே, தொகுதியில் உள்ள ஒரே பணிமனையில், 77 பேருந்துகளை நிற்க வைத்து, தொகுதிக்குத் தேவையான வழித்தடங்களை நிறைவு செய்ய இயலாத நிலையுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ராசியான நாள். கடந்த 9-4-2013 அன்று இதே செவ்வாய்க்கிழமை அன்று, வீரம் விளைந்த கயத்தாறு மண்ணில் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட முதல் சுதந்திரப் போராட்ட வீரன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை, (மேசையைத் தட்டும் ஒலி) 50 ஆண்டுகாலக் கோரிக்கையை, வினா எழுப்பிய அடுத்த வினாடியே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக இன்றைக்கு நாடே அம்மா அவர்களை நன்றி பாராட்டிக் கொண்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, மக்கள் நலன் காத்திடும் நல்ல அரசில் பொதுமக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும்வண்ணம் 'மனம் இருந்தால் மார்க்கம் இருக்கும்' என்ற வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கயத்தாறில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தந்திட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனப் பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொகுதியில் கயத்தாறை மையமாகக் கொண்டு 12 பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டுகளில் பேருந்துகளினுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர்

2013 ஏப்ரல் 23]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, கயத்தாறில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்து சென்று, ஆவன செய்யப்படும் என்று கூறியதற்கு நன்றி கூறி அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 304, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

304—

திருக்கோயில் புனரமைப்பு

***18558—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், சிறுமருதூர் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின்